செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 313 நாள்: 06/18

## செய்தி

வேலூர் மாவட்டத்திலுள்ள வாணியம்பாடி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 2018-ம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெற உள்ளது. இச்சேர்க்கையில் கலந்து கொள்ள www. Skilltraining.tn.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம் அல்லது அருகில் உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு தகுந்த சான்றிதழ்களுடன் சென்று இலவசமாக விண்ணப்பித்துக்கொள்ளலாம். 10ஆம் வகுப்பு தேர்ச்சி/8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம் வயது வரம்பு 14 முதல் 40 வயது ஆகும். பெண்களுக்கு உச்ச வரம்பு இல்லை. இப்பயிற்சியில் சேர்ந்து பயில பயிற்சி கட்டணம் ஏதும் இல்லை. மேலும் மாதந்தோறும் ரூ.500/- உதவித்தொகை, மடிக்கணினி, காலணிகள், வரைபடக்கருவிகள், மிதிவண்டி மற்றும் இலவச பேருந்து பயண அட்டை ஆகியவை இலவசமாக வழங்கப்படுகிறது. விண்ணப்பிக்க கடைசி நாள்.27.06.2018 எனவே பயிற்சியில் சேர்ந்து பயன்பெறுமாறு முதல்வர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் வாணியம்பாடி வேலூர் மாவட்டம் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

கீழ்க்கண்ட தொழிற்பிரிவுகள் 2018-ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெற்று வருகிறது.

| வ. எண் | தொழிற்பிரிவுகள் | கல்வி தகுதி | பயிற்சிகாலம் |
|---|---|---|---|
| 1 | லிப்ட் மற்றும் எஸ்கலேட்டர் மெக்கானிக் | 10-ஆம் வகுப்பு தேர்ச்சி | 2 வருடம் |
| 2 | பேஷன் டிசைன் மற்றும் டெக்னாலஜி | 10-ஆம் வகுப்பு தேர்ச்சி | 1 வருடம் |
| 3 | கம்மியர் மோட்டார் வண்டி | 10-ஆம் வகுப்பு தேர்ச்சி | 2 வருடம் |
| 4 | கம்மியர் குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பநிலையை கட்டுப்படுத்துதல் | 10-ஆம் வகுப்பு தேர்ச்சி | 2 வருடம் |
| 5 | தோல்பொருள் உற்பத்தியாளர் | 8-ஆம் வகுப்பு தேர்ச்சி | 1 வருடம் |

முதல்வர்
அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்
வாணியம்பாடி - 632 751.

தமிழ்நாடு அரசு
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை
அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், வேலூர் -10

வேலூரிலிருந்து பெங்களூரு செல்லும் வழியில் வாணியம்பாடி புறவழிச்சாலையில் ஆலங்காயத்திற்கு செல்லும் வழியில் பெருமாள் பட்டியில் அமைந்துள்ள வாணியம்பாடி அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் ஆகஸ்ட் 2018-ம் கல்வியாண்டு பயிற்சியாளர்களின் கலந்தாய்வு சேர்க்கைக்கு Online மூலம் விண்ணப்பங்கள் 28.05.2018 முதல் பதிவு செய்யப்பட்டு வருகிறது. விண்ணப்பிக்கும் கடைசி நாள் 27. 06. 2018 வரை ஆகும். கீழ்க்காணும் பிரிவுகளில் சேர 10-ஆம் வகுப்பு தேர்ச்சியும்

LIFT AND ESCALATOR MECHANIC, FASHION DESIGN AND TECHNOLOGY, MECHANIC MOTOR VEHICLE and MECHANIC REFRIGERATION AND AIR CONDITION

LEATHER GOODS MAKER பிரிவில் சேர 8-ஆம் வகுப்பு தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும் பல்வேறு தொழிற் பிரிவுகளில் சேர்க்கை ( ஆண் / பெண் ) இருபாலருக்கும் ஓராண்டு மற்றும் ஈராண்டு தொழிற் பிரிவுகளில் சேர்க்கை நடைபெற உள்ளது.

பயிற்சியில் சேர விரும்பும் பயிற்சியாளர்கள் அதற்கான விண்ணப்பத்தினை www.skilltraining.tn.gov.in என்கிற இணையதள முகவரியில் விபரங்கள் நேரடியாக பதிவு செய்திடல் வேண்டும். அதனை செய்திட இயலாத விண்ணப்பதாரர்களின் நலன் கருதி இத்தொழிற்பயிற்சி நிலையத்தில் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்திட தக்க வழிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

- இதற்கான பயிற்சிக்கட்டணம் முற்றிலும் இலவசம்
- அனைத்துப் பயிற்சியாளர்களுக்கும் இலவச Bus Pass வழங்கப்படுகிறது
- அனைத்துப் பயிற்சியாளர்களுக்கும் பிரதிமாதமும் வருகையின் அடிப்படையில் ரூ.500/ கல்வி உதவித்தொகை அரசால் வழங்கப்படுகிறது
- அனைத்துப் பயிற்சியாளர்களுக்கும் புத்தகங்கள், வரைபடக்கருவிகள், சீருடைகள், சீருடை தையல் கூலி, காலணிகள் இலவசமாக வழங்கப்படுகிறது
- பயிற்சியாளர்களுக்கு தகுதியின் அடிப்படையில் விலையில்லா மடிக்கணினி மற்றும் மிதிவண்டி அரசால் வழங்கப்படுகிறது
- இதற்கான கல்வித்தகுதி தொழிற் பிரிவுகளைப் பொறுத்து 8 ம் வகுப்பு 10ம் வகுப்பு தேர்ச்சிப்பெற்றிருக்க வேண்டும்
- பிற்படுத்தப்பட்ட , மிகவும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பு / பழங்குடியினர் பயிற்சியாளர்களுக்கு இலவச உணவு வசதியுடன் தங்கும் விடுதி தகுதியின் அடிப்படையில் வழங்கப்படும்
- வயது வரம்பு 14 முதல் 40 வரை ஆகும் ( மகளிருக்கு வயது வரம்பு இல்லை )
- அனைத்துப் பயிற்சியாளர்களுக்கும் NIMI புத்தகம் அரசால் வழங்கப்படுகிறது
- இத்தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி முடித்த அனைத்து பயிற்சியாளர்களுக்கும் ( Campus Interview ) மூலம் தனியார் துறையில் வேலைவாய்ப்பு பெற்று வழங்கப்படுகிறது.